STAFF COPY
NOT FOR SALE

Registered as a Newspaper

New Master
INSTITUTE
B.M.G. Lane, JAFFNA.

A/L 87 AUG.
ஒலியியல்
திரு. வர்ணம்
திங்கள் -- வெள்ளி
பிற்பகல் 8-00 மணி

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை:
ரூ. 1-25

89 A/L
பிரிவு: II
ஆரம்பம் 28-03-87
விலங்கியல் - நாகநாதன்
தாவரவியல் - குகாதரன்
பௌதிகவியல் - வர்ணம்
இரசாயனவியல் -
தில்லைநாதன்
தூய - பிரயோக கணிதம் -
திரு நடேசபா
New Master
INSTITUTE
B. M. G. Lane, JAFFNA.

[illegible] 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ பங்குனி மீ 30 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபான் பிறை 13 (13.04 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 1

மருத்துவ சிகிச்சைக்காக

கிட்டு கியூபாவிற்கு அனுப்பப்படுவாரா?

தூதரகம் மறுக்கிறது

கொழும்பு, ஏப்ரல் 13

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி கிட்டு மேலதிக வைத்திய சிகிச்சைக்காக கியூபாவுக்கு கொண்டு செல்லப்படவிருக்கிறார் என்ற செய்தியை கொழும்பில் உள்ள கியூபாத் தூதர் மறுத்திருக்கிறார்.

திரு. கிட்டுவை கியூபாவுக்குக் கொண்டு செல்வது குறித்து ஆராயப்படுகிறது என்று 'திவயின' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டது.

இச்செய்தியை கியூபாத் தூதர் திருமதி சமோரா ட்ரியாஸ் மறுத்திருக்கிறார்.

"கியூபா அரசுக்கும் தமிழ்ப்போராளி அமைப்புக்களுக்கும் இடையே எவ்வித தொடர்பும் கிடையாது. திரு கிட்டுவை வைத்திய சிகிச்சைக்காக கியூபா கொண்டு செல்வது குறித்து ஆராயப்படுகிறது என்ற செய்தி ஆதாரமற்றது"- இப்படி கியூபா தூதர் தெரிவித்துள்ளார். (உ-ஐ ஏ)

கோட்டையிலிருந்து நேற்றும் ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ் கோட்டை முகாமில் இருந்து நேற்றும் ஷெல் தாக்குதலும் துப்பாக்கிச் சூடுகளும் தொடர்ந்தன.

இதனால் ஸ்ரீ லங்கா அரசால் பிரகடனப்படுத்தப்பட்ட யுத்த நிறுத்தம் இரண்டாவது நாளாகவும் மீறப்பட்டுள்ளது.

கோட்டை முகாமில் இருந்து நேற்று ஏவப்பட்ட ஷெல் குண்டு ஒன்று நாவலர் பகுதியிலும், யாழ் நகரப் பகுதியிலும் விழுந்து வெடித்ததாகத் தெரியவருகிறது.

துப்பாக்கி வேட்டுகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன.

நேற்று எவருக்கும் காயமோ சேதமோ ஏற்படவில்லை. (உ-10)

ஜனாதிபதியின் பதிலை புறக்கணித்து கைதிகள்

தொடர்ந்து உண்ணாவிரதம்

கொழும்பு, ஏப்ரல் 13

கைதிகளின் கோரிக்கைகளை சட்டமா அதிபர் பரிசீலனை செய்வதாக ஜனாதிபதி அளித்த பதிலை தமிழ் அரசியல் கைதிகள் புறக்கணித்துவிட்டனர். அவர்களில் பத்துப்பேர் வெலிக்கடைச் சிறையில் தொடர்ந்து சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு உள்ளனர்.

இதனிடையில், புத்தாண்டு தினத்தை ஒட்டி வழங்கப்பட்ட புதிய ஆடைகள், உணவுப் பொருட்கள் முதலியவற்றை ஏற்றுக்கொள்ள தமிழ் அரசியல் கைதிகள் மறுத்துவிட்டனர். (உ-எ)

பஸ்ஸிலிருந்து விழுந்த மாணவி மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 13

ஓடிக்கொண்டிருந்த மினி பஸ்ஸில் இருந்து கீழே விழுந்த பாடசாலை மாணவி ஒருவர் நேற்று மரணமானார்.

கோப்பாயைச் சேர்ந்த அருணாசலம் பவானி (வயது 17) என்ற மாணவியே இவ்வாறு பரிதாபமாக மரணமானார்.

மேற்படி மாணவி யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் ரியூசன் எடுப்பதற்காக நேற்று கோப்பாயில் இருந்து மினிபஸ்ஸில் பயணம் செய்தார்.

மினிபஸ் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் உள்ள திருப்பத்தில் திரும்புகையில் அவர் பஸ்ஸிலிருந்து வெளியே தூக்கி வீசப்பட்டார் என்றும்-

உடனடியாக அவர் மினி பஸ்ஸில் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரும் வழியில் அவர் மரணமானார் என்றும் கூறப்படுகிறது. (உ-10)

ஆனையிறவில் பெர்மிட் அநுராதபுரத்தில் டீசல்

யாழ்ப்பாணம், ஏப். 13

இன்று முதல் வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களுக்கு ஆனையிறவு இராணுவ முகாமில் வைத்து டீசல் பெர்மிட் வழங்கப்படவுள்ளது.

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் உயரதிகாரிகள் இன்று முகாமுக்குச் சென்று டீசல் பெர்மிட் பெற்றுக்கொள்வர் எனவும் தெரியவருகிறது.

இந்தப் பெர்மிட்டுக்கான டீசல் அநுராதபுரத்திலேயே வழங்கப்படும். (உ-10)

ஒக்ஸ்பாம் பிரதிநிதி நேற்று யாழ் விஜயம்

யாழ்ப்பாணம், ஏப். 13

இங்கிலாந்திலுள்ள ஒக்ஸ்பாம் தொண்டர் நிதி நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி திரு. சாம் ஹெண்டி ஒருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்தார்.

குடாநாட்டிலுள்ள உள்ளூர், வெளி மாவட்ட அகதிகளின் நிலையை நேரில் கண்டறியவே இவ்விஜயத்தை அவர் மேற் (4 ஆம் பக்கம் பார்க்க)

பேச்சுத் தாமதிக்கத் தாமதிக்க........................

........................நிமிடத்துக்கு நிமிடம்

ராணுவ நடவடிக்கையை அதிகரிக்க அரசு முஸ்தீபு

கொழும்பு, ஏப்ரல் 13

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சு வார்த்தைக்கு வருவதற்கு, தமிழ்ப் போராளிகள் தாமதிக்கத் தாமதிக்க நிமிடத்துக்கு நிமிடம் அரசாங்கம் தனது இராணுவத் தாக்குதலை தீவிரப் படுத்தும்.

அதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசாங்க உயர் மட்டங்களில் இருந்து அறிய வந்துள்ளது.

இப்போது அமுலுக்கு வந்துள்ள தாக்குதல் நிறுத்தக் காலம் முடிவதற்குள் அமைதியைப் பேண போராளிகள் ஒத்துழைக்காவிடில் வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

அரசாங்கத்துடன் மிக நெருங்கிய வட்டாரங்களில் இருந்து இவ்விவரங்கள் தெரியவந்துள்ளன.

இவை சம்பந்தமாக அரசாங்கத்தின் மிக முக்கிய புள்ளி ஒருவர் பின்வருமாறு கருத்து வெளியிட்டார் என உதயனுக்கு மிக நம்பிக்கையாக அறியவந்திருக்கிறது:-

இந்திய அரசின் மத்தியஸ்தத்துடன் பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்கவே அரசு விரும்புகிறது — தீவிரவாதிகள் பேச்சு வார்த்தைக்கு வரத் தவறினால் நிச்சயம் அவர்கள் மீதான தாக்குதல்களை அதிகரிப்போம் --

அவ்வேளையில் பொது மக்களும் பாதிப்புக்குள்ளாகலாம். இப்போது அப்படி நடக்கிறது: படைகள் ஏவும் ஷெல் குண்டுகள், பீரங்கி குண்டுகள் (சாதிக்க வாக்கிக) இலக்கு மாறி வீடுகள், கடைகள் மீது விழுந்து வெடிக்கின்றன. இது தவிர்க்க முடியாதது. இப்படியான தவறுதல் சம்பவங்களால் பொதுமக்கள் சில வேளைகளில் உயிரிழப்பதையும் (4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



கதை மாத்துறதிலும் பொய் சொல்லுறதிலும், தருணத்துக்கு ஏத்த மாதிரி தரிகிணதோம் போடுறதிலையும் ஸ்ரீலங்கா அரசை எவையும் வெல்ல ஏலாது......!

நிலக்கண்ணியில் சிக்கிய பவ்வின் தூக்கி வீசப்பட்டது

சிப்பாய்களின் மரண விசாரணையில் சாட்சியம்

கொழும்பு, ஏப். 13

தரைக் கண்ணிவெடியில் சிக்கிய பவ்வின் கவசவாகனம் 8 அடி உயரத்துக்கு தூக்கி வீசப்பட்டது.

பொரதிவு கண்ணிவெடித் தாக்குதல் சம்பவம் பற்றி நடத்தப்பட்ட விசாரணையில் சாட்சியமளித்த பொலிஸ் கொமாண்டோ வான் சாமினி ரணராஜா மேற்கண்டவாறு சொன்னார்.

இத்தாக்குதலில் மரணமான பாதுகாப்புப் படையினரின் மரண விசாரணை கொழும்பில் மரண விசாரணை அதிகாரி திரு. எட்வர்ட் அனகம முன்னிலையில் நடைபெற்றது.

அந்த சாட்சி சாமினி ரணராஜா மேலும் சொன்னதாவது:

களுவாஞ்சிக்குடியில் இருந்து அம்பிளாந்துறை நோக்கி 40 படையினர் இரண்டு வாகனங்களில் சென்று கொண்டிருந்தோம்.

பொரதீவுக் கிராமத்தைத் தாண்டிச் சென்று கொண்டு இருந்த சமயம் தரைக் கண்ணிவெடியில் பின்னால் வந்த பவ்வின் கவச வாகனம் சிக்கியது.

இதனால் அந்த பவ்வின் வாகனம் 8 அடி உயரத்துக்கு தூக்கி வீசப்பட்டது.

அதன் பின்னர் பட்டினுள் பதுங்கி இருந்த தீவிரவாதிகள் எம்மை நோக்கிச் சுட ஆரம்பித்தனர்.

நாமும் பதிலுக்குத் தாக்கினோம். மோதல் நின்ற பின்னர் பார்த்த போது இரண்டு சிப்பாய்கள் உயிரிழந்து கிடந்தனர்.

சுபநேரம்

13-04-1987
திங்கட்கிழமை
சுபநேரம்:
12-06 முதல் 01-36வரை
ராகுகாலம்:
7-36 முதல் 9-06 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பூரணை விரதம்

இனப்பிரச்சினை உருவாக சிங்களவரே காரணம்

தொண்டா கூறுகிறார்

கொழும்பு, ஏப்ரல் 13

இன்றைய இனப் பிரச்சினையை தமிழர்கள் உருவாக்கவில்லை, சிங்களவர்களே அதனை உருவாக்கினர்கள்.

இப்படிச் சொன்னார் அமைச்சர் தொண்டமான்.

'சண்டே ஐலண்ட்' இதழுக்களித்த பேட்டி ஒன்றில் அமைச்சர் இப்படிப் பதிலளித்தார்.

பேட்டி வருமாறு:

கேள்வி: மலையகத்தில் பத்துச் சத வீதமானோர் தமிழர் என்று கூறுகின்றீர்கள். இலங்கை முழுவதும் தமிழர் குறைந்த எண்ணிக்கையில் வாழ்ந்தும் இன்று பிரச்சினை ஏற்பட்டுள்ளதே...?

அமைச்சர்: பிரச்சினை தமிழர்களினால் உருவாக்கப்படவில்லை. பிரச்சினையை உருவாக்கியவர்கள் சிங்களவர்களே. தமிழரைப் [illegible] இருக்கிறீர்கள். வடக்கு, கிழக்குத் தமிழரை எப்படி குற்றஞ்சாட்ட முடியும்?

பண்டா-செல்வா ஒப்பந்தம் மூலம் தமிழர் ஓர் உடன்பாட்டுக்கு வந்தனர், அந்த ஒப்பந்தம் ஏன் அமுல் நடத்தப்படவில்லை? மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்று ஓர் உடன்பாட்டுக்கு வந்தனர். அது சரியாக அமுல் நடத்தப்பட்டதா? 'இணைப்பு-சி'ஐ தமிழர் ஏற்றுக்கொண்டனர். அது (4 ஆம் பக்கம் பார்க்க)

அரோகரா கோஷத்துடன்

மாவை ஆலயத்தில் பூசைகள் ஆரம்பம்

காங்கேசன்துறை ஏப் 13

'ஷெல்' தாக்குதலை அடுத்து பூசைகள் நிறுத்தப்பட்டிருந்த கந்தசுவாமி கோவிலுக்கு நேற்று ஊர்வலமாக வந்த சைவப் பெருமக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து பிராயச்சித்தப் பூசைகள் செய்யப்பட்டு அரோகரா கோஷத்துடன் 15 நாட்களின் பின்னர் பூசை ஆராதனைகள் ஆரம்பமாகின.

இன்று தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் இருந்து ஆரம்பமான சைவ எழுச்சி ஊர்வலம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலை வந்தடைந்தது. பல நூற்றுக்கணக்கானோர் ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

ஊர்வலத்தில் பங்குபற்றியவர்கள் பக்திமயமாக முருகனைப் போற்றும் பாக்களை பாடியவாறு மாவை ஆலயத்தைச் சென்றடைந்தனர்.

ஊர்வலத்தில் வந்த சைவப் பெருமக்களின் வேண்டுதலையடுத்து மாவை ஆதீனகர்த்தா கு. ஷண்முகநாதக் குருக்கள் பிராயச்சித்தம் போன்ற கிரியைகளைச் செய்து பூசை ஆராதனைகளை ஆரம்பித்து வைத்தார். (உ-68)

வைத்திய சங்க தூதுக்குழு யாழ் வரும்

கொழும்பு, ஏப் 13

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக்குழு ஒன்று யாழ் ஆஸ்பத்திரியைப் பார்வையிடுவதற்காக புதுவருடப் பிறப்பிற்கு ஒருசில நாட்களின் பின் வடக்கே வரவிருக்கிறது.

இதேவேளை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிமீது ஷெல் தாக்குதல் நடைபெற்றது குறித்த அரச வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக்குழு கடந்த வியாழக்கிழமை லவித் (4 ஆம் பக்கம் பார்க்க)

செம்மலையில் தேடுதல்!

திருமலை அகதிகளும் முல்லைத்தீவில் கைது

முள்ளியவளை, ஏப் 13

முல்லைத்தீவில் செம்மலைக் கிராமத்தில் நடத்தப்பட்ட தேடுதலின் போது கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 76 பேரில் திருமலையில் இருந்து இடம் பெயர்ந்து வந்த அகதிகளும் அடங்கியுள்ளனர்.

சென்ற 5 ஆம் திகதி ஹெலிக்கொப்டர் மூலம் கொண்டு செல்லப்பட்டு இறக்கப்பட்ட படையினர் செம்மலையைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தி (4 ஆம் பக்கம் பார்க்க)

அரசு கதையை மாற்றுகிறது!

யுத்த நிறுத்தம் அல்ல மோதல் தவிர்ப்பு அறிவிப்பே!

படைகளும் முகாம்களுக்குள் இருக்கும் என்பதல்ல

கொழும்பு, ஏப்ரல் 13

அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை அறிவிக்கவில்லை. தாக்குதலை நிறுத்தப்போவதாகவே அறிவித்தது. அக்காலத்தில் முகாமுக்குள் இராணுவத்தை வைத்து இருக்கப் போவதாகவும் அரசு அறிவிக்கவில்லை.

- இப்படி அரசின் சார்பில் வெகுஜனத்தொடர்பு நிலையம் நேற்றுத் தெரிவித்தது.

இலங்கை அரசின் ஒருதலைப் பட்சமான பத்து நாள் யுத்தநிறுத்தத்தை நிராகரிப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அறிவித்திருக்கின்றன.

இதையடுத்தே வெகுஜனத் தொடர்பு நிலையம் முன்கண்டவாறு தெரிவித்தது.

'சட்டபூர்வமான அரச ஒன்றுக்கும் தீவிரவாதிகள் குழுவுக்கும் இடையே யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒன்று இருக்க முடியாது.

'தாக்குதலை நிறுத்தப் போவதாகவே அரசு அறிவித்தது. மோதல்களைத் தவிர்க்கும் அறிவிப்பே அது.

'புதுவருடம், பெரிய வெள்ளி ஆகியவற்றை ஒட்டி பொதுமக்களின் நன்மை கருதி இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது' என்று வெகுஜன தொடர்பு நிலையம் மேலும் தெரிவித்தது (உ-எ)

அகதிப் பெண்களை பணயம் வைத்து கணவன்மாருக்கு வலை விரிக்கும் சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஏப் 13

தமது வீடுகளைப் பார்வையிடச் செல்லும் அகதிப் பெண்களை பிடித்து வைக்கும் சிப்பாய்கள் அந்தப் பெண்களைப் பணயமாக வைத்து கணவன்மாரை முகாமிற்கு வரும்படி நிர்ப்பந்தம் விதிக்கின்றார்களாம்.

இப்படி முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள திருமலை அகதிப் பெண்கள் முறையீடு செய்துள்ளனர்.

திருமலை அகதிகளில் பெரும்பாலானோருக்கு அரசின் நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

அவர்களை திருமலையில் சொந்த இடத்தில் மீளக் குடியேறுமாறு அரசு வற்புறுத்துகின்றது.

பல அகதிகள் மீளக் குடியேறச் சென்றனர்.

அவ்வாறு சென்றவர்களில் சில பெண்களை இராணுவம் முகாமுக்குக் கொண்டு போயுள்ளது.

கணவன்மார்களை வந்து சரணடையும்படி இராணுவத்தினர் கேட்கின்றனர்.

இவ்வாறு இராணுவத்தால் பிடிபட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட ஓர் அகதிப் பெண் முல்லைத் (4 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய அமைச்சரவையிலிருந்து

பாதுகாப்பு அமைச்சர் வி. பி. சிங் ராஜினாமா

புதுடில்லி, ஏப். 13

இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் பதவியை திரு. வி. பி. சிங் ராஜினாமாச் செய்துவிட்டார்.

புதிய பாதுகாப்பு அமைச்சராக திரு. கே. சி. பந்த் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. சிங்கின் ராஜினாமாவை ஏற்கும்படி பிரதமர் ராஜீவ்காந்தி ஜனாதிபதிக்கு சிபார்சு செய்தார்.

அதைத் தொடர்ந்து திரு சிங்கின் ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேற்கு ஜேர்மனியில் இருந்து நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்கியது சம்பந்தமாக இந்தியாவில் உள்ள பிரமுகர்கள் சிலர் கமிஷன் பணமாக ஒரு கோடி ரூபாவுக்கு அதிகமாக பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும்படி திரு சிங் உத்தரவிட்டிருந்தார்.

இது புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் (4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★★★★★★★★★
★ இன்றைய சிறு ★
★ விளம்பரங்கள் ★
★★★★★★★★★

அறிவித்தல்

நாம் புதிய கிளை ஸ்தாபனம் ஒன்றை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள (Bank of Ceylon) அருகாமையில் ஆரம்பித்துள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். கண் வைத்திய நிபுணர்களினால் பரிசோதனை செய்த கண்ணாடிகளைச் சரிவரப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம். S. M. Fernando 580, 1 ஆம் மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1111)

தவறிவிட்டது

சோமுப்பிள்ளை பால கிருஷ்ணன் முள்ளிசேரப், முள்ளியவளை என்பவரின் அடையாள அட்டை No 34,130,1505 X 09.04.1987 அன்று வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. அத்துடன் டயறியும் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி முகவரிக்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1197)

எரிபொருள் தட்டுப்பாடு; சட்ட விரோத மின்பாவனை

மீண்டும் அதிகரிப்பு

பலாலி, ஏப்ரல் 18

வலிகாமம் வடக்கு, தெற்கு, கிழக்குப் பகுதிகளில் சட்டவிரோத மின்சாரம் பெறுபவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

மண்ணெண்ணெய்யின் விலை அதிகரிப்பினாற் கட்டுக்கடங்காது மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மின் பாவனையினால் யாழ் மாவட்டம் இருளில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் சுன்னாகத்தில் மயிலங்காடு மின்மாற்றி பெரும் சத்தத்துடன் வெடித்தமைக்கும் அச்சுவேலியில் மின்மாற்றி பழுதடைந்தமைக்கும் சட்டவிரோத மின்பாவனையே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள இன்னும் பல மின்மாற்றிகள் மின்பழுகூடி வெடித்துச் சிதறும் அபாய நிலையில் உள்ளதாகவும்—

ஏற்கனவே மேலதிக மின்பாவனைக்குரிய பணம் பல உப அலுவலகங்களிலும் செலுத்தப்படாது நிலுவையாக இருப்பதினாலும்—

புதிய மின் மாற்றிகள் பெறுவதால் பல சிக்கல்கள் நிலவுவதாகவும்—

குடாநாடே இருளில் மூழ்கும் அபாயம் தோன்றியுள்ளதாகத் தெரியப்படுகிறது. (119)

அகதிகளுக்கு உதவி

திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் இராணுவ செடிபிடியின் காரணமாக இடம் பெயர்ந்துவந்து சுன்னாகம் ரயில் நிலையத்தில் அகதிகளாக வசிக்கும் மக்களுக்கு சுன்னாகம் மக்கள் உணவுப் பொருள்களைச் சேகரித்து வழங்கியுள்ளனர் (உ-119)

கிராம மட்டத்தில் தொழில் முயற்சிகள்

அவசியம் என வலியுறுத்து

கரவெட்டி, ஏப்ரல் 18

இன்றைய நிலையில் நமது மக்கள் அரசாங்கத்தை நம்பியிராமல் கிராம மட்டத்தில் பல வகையான தொழில் முயற்சிகளை ஏற்படுத்தி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க வேண்டும்.

உள்ளூர் வளங்களை பயன்படுத்தி அதற்கிணங்க தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கவேண்டும்.

—இவ்வாறு கொற்றையூர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய சங்கத் தலைவர் திரு ஆ. க. மாணிக்கம் குறிப்பிட்டார்.

விவசாய உத்தியோகத்தர் திரு எஸ். செல்வநாயகம், கிராம சேவை உத்தியோகத்தர் திரு. பெ. மாணிக்கவாசகர் ஆகியோர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர் (உ-70)

மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின்

நடவடிக்கைகள் பற்றி அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 18

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் இரண்டாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் இம்மாதம் நடைபெறவிருக்கிறது.

இதையொட்டி சங்கம் ஆற்றிய சேவைகள் பற்றி பொதுச் செயலாளர் திரு சிங்கிளேயர் பீற்றர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

அவர் தெரிவித்திருப்பதாவது!

பாதிக்கப்பட்ட 75 குடும்பங்கள் நெற்செய்கையில் ஈடுபட சிறுவர் பராமரிப்பு நிதியத்தின் உதவியுடன் சங்கம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவு செய்தது.

35 பாடசாலைகளைச் சேர்ந்த 480 பிள்ளைகளுக்குத் தேவையான புத்தகங்கள், உபகரணங்களை 1987 கல்வி ஆண்டில் சங்கம் விநியோகித்தது.

பெற்றோரை இழந்த 16 மாணவர் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல கல்லூரிகளில் கல்வி கற்க தென் இந்திய திருச்சபை யாழ் ஆயர் வண பிதா டி. ஜே. அம்பலவாணரின் உதவியுடன் சங்கம் நடவடிக்கை எடுத்தது.

வெகுவாகப் பாதிக்கப்பட்ட நாகதாழ்வு செல் தோமஸ் பாடசாலைக்குத் தேவையான உபகரணங்கள் செய்வதற்குச் சங்கம் உதவி புரிந்தது. மன்னார் ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நோயாளர் வார்ட்டைப் பராமரிக்கும் பொறுப்பைச் சங்கம் ஏற்றிருக்கின்றது.

படுகொலைக்கு ஆளான கொக்கட்டிச்சோலை மக்களின் குடும்பங்களுக்கு உதவ மட்டக்களப்பு ஆயர் மூலம் 5 ஆயிரம் ரூபாவும் யாழ். கன்னியர் முன்னணி ஆரம்பித்துள்ள ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலை நிதிக்கு ஆயிரம் ரூபாவும் சங்கம் நன்கொடையாகக் கொடுத்தது.

இப்படி பொதுச் செயலாளர் திரு. சிங்கிளேயர் பீற்றர் தெரிவித்தார். (-எ)

டொமினிக் ஜீவாவுக்கு மணிவிழா

யாழ்ப்பாணம், ஏப்.13

பிரபல எழுத்தாளரும் 'மல்லிகை' ஆசிரியருமாகிய திரு. டொமினிக் ஜீவா ஆக்க இலக்கியம் சஞ்சிகை இலக்கியத் தொடர்பு முதலிய துறைகளில் ஆற்றிவரும் சேவையைக் கௌரவித்து அவரது அறுபதாவது பிறந்த நாளை ஜூன் மாத இறுதியில் மணிவிழாவாகப் பொருத்தமான வகையில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கென மல்லிகை ஜீவா மணிவிழாக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குழு உறுப்பினர்கள் வருமாறு:-

தலைவர் டாக்டர் எம். கே. முருகானந்தன், கூட்டுப் பொருளாளர்கள்: பேராசிரியர் அ சண்முகதாஸ், திரு. எஸ். கே. மனோகரபூபன், செயலாளர்: திரு என் சோமகாந்தன்.

செயற்குழு உறுப்பினர்கள்; பேராசிரியர் நந்தி. வணபிதா ஆர். எம். சி. நேசநாயகம், திரு சி. வி. கே. சிவஞானம் (மாநகர ஆணையாளர்), திரு. தெணியான், திரு. எம். வி. தம்பையா, திரு. பூ. ஸ்ரீதரசிங்.

வெளியூர்ப் பிரதிநிதிகள்: கொழும்பு- திரு. ஞா. ரெங்கநாதன், திரு. மேமன்கவி, திருமதி யோகா பாலச்சந்திரன், கண்டி- திரு அந்தனி ஜீவா, பூண்டுலோயா- திரு. சாரல்நாடன், பண்டாரகம- திரு. திக்குவல்லைகமால், கல்முனை- மருதூர்க் கொத்தன், மன்னார்- அன்பு ஜவஹர்ஷா, ஹட்டன்- திரு. எஸ். இருதயராஜ்

கட்டுவன் இருளில்

பலாலி, ஏப். 13

கட்டுவனில் இருந்த மின்மாற்றி பழுதடைந்துள்ளதனால் ஆதி மயிலிட்டி கட்டுவன் மயிலிட்டி வடக்குப் பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

இராணுவ முகாம் விஸ்தரிப்பினாலும், ஹெலிக்கொப்டர் சூட்டுச் சம்பவங்களினாலும் அப்பகுதிக்குச் சென்று மின்மாற்றியை திருத்த ஊழியர்கள் அஞ்சுவதாகக் கூறப்படுகிறது- (உ-119)

விளையாட்டரங்கு

பாடசாலைகளுக்கிடையிலான

உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

வேலணை கொத்தணி

ஆண்கள் 13 வயதுப் பிரிவு:-

சைவப்பிரகாச வித்தியாலயம் முதலாமிடம், சரஸ்வதி மகாவித்தியாலயம் இரண்டாமிடம், சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்தியமகா வித்தியாலயம் மூன்றாமிடம்.

15 வயதுப்பிரிவு:- வேலணை சைவப்பிரகாச ம வி. முதலாமிடம், சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி ம வி இரண்டாமிடம், நடராஜா வித்தியாலயம் மூன்றாமிடம்.

பெண்கள் 13 வயதுப் பிரிவு:-

சைவப்பிரகாச வித்தியாலயம் முதலாமிடம், சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி ம ம. வி இரண்டாமிடம், நாகேஸ்வரி ம. வி மூன்றாமிடம்

17 வயதுப் பிரிவு:-

சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி ம. ம. வி முதலாமிடம், நடராஜா வித்தியாலயம் இரண்டாமிடம், நாகேஸ்வரி ம வி மூன்றாமிடம்

19 வயதுப்பிரிவு;-

சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி ம. ம வித்தியாலயம் முதலாமிடம்,

உசன் கொத்தணி

ஆண்கள் 13 வயதுப் பிரிவு:-

மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை முதலாமிடம்,

17, 19, வயதுப்பிரிவுகள்:- உசன் இராமநாதன் ம வி முதலாமிடம்.

பெண்கள் 13 வயதுப் பிரிவு:-

உசன் இராமநாதன் ம. வி முதலாமிடம், எழுதுமட்டுவாள் அ த. க பாடசாலை இரண்டாமிடம், மிருசுவில் றோ. க. த. பாடசாலை மூன்றாமிடம்.

17 வயதுப் பிரிவு:-

உசன் இராமநாதன் ம. வி முதலாமிடம், மிருசுவில் அ. த. க. பாடசாலை இரண்டாமிடம்,

19 வயதுப்பிரிவு:-

உசன் இராமநாதன் ம. வி முதலாமிடம், கமலாசினி வித்தியாசாலை இரண்டாமிடம்.

(முற்றும்)

(உ - 7)

கதிரவேலு இல்லம்

மானிப்பாய், ஏப்ரல் 13

கடந்த சில ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இவ்வாண்டு சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றன.

விளையாட்டுப் போட்டிகளில் கதிரவேலு இல்லம் சிறப்பாகக் கலந்துகொண்டு இவ்வாண்டுக்கான சாம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ். தனஞ்செயன் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். (இ-90)

கொக்குவில் அணி

3 விக்கெட்டுகளினால் வெற்றி

யாழ்ப்பாணம், ஏப்13

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணியை கொக்குவில் மத்திய சன சமூக நிலைய அணி 3 விக்கெட்டுகளினால் தோற்கடித்தது

50 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட இந்த ஆட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது'

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலி ஸ்ரார்ஸ் அணி 56 4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

பி. முருகவேள் 39, எஸ். சுரேஸ் 38, கே. விஜயகுமார் 15 ஓட்டங்களைப் பெற்றனர்,

மகேந்திரகுமார், சசிதரன், உமாசங்கர் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய கொக்குவில் மத்திய சன சமூக நிலைய அணி 39.1 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்களைப்பெற்று வெற்றியீட்டியது.

ரஞ்சித் 49, [illegible]நாத் 29, சந்திரன் 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

கே. விஜயகுமார் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (உ-7)

மேசைப் பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டுச் சமூகத்தினரால் மேசைப் பந்தாட்டப் போட்டிகள் சமீபத்தில் நடத்தப்பட்டன.

இப்போட்டிகளுக்கு திரு நிர்மலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஆண் ஒற்றையர் ஆட்டத்தில் பி முகுந்தராஜா முதலிடத்தையும் வி வே அருளானந்தம் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

பெண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் எஸ். கோமதி முதலாம் இடத்தையும் ஜி சாந்தி இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

ஆண்கள் இரட்டையர் ஆட்டத்தில் எஸ். முகுந்தன், டி. குலநாதன் முதலாம் இடத்தையும், கே. ராஜன், பி. முகுந்தராஜன் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

பெண்கள் இரட்டையர் ஆட்டத்தில் எம். நிர்மலா, ஜே. பிரமிளா முதலாம் இடத்தையும், பி அனுஷா எம். நளாயினி இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

கலவன் இரட்டையர் ஆட்டத்தில் எம். சி. சேரன், எம் கோமதி முதலாம் இடத்தையும் கே ராஜன், ஜே பிரமிளா இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

இப்போட்டிகளை யாழ் பல்கலைக்கழக மேசைப் பந்தாட்ட குழு உறுப்பினர்கள் ஜே. மோகன், வி வே நவீனன் ஒழுங்கு படுத்தியிருந்தனர்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினர் வழங்கினார். (இ-ள)

மாணவனின் கல்விக்கு

பெற்றோரின் பங்களிப்பு அவசியம்

சிரமதான வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், ஏப்.18

ஆரம்ப பாடசாலைக் கல்வியே ஒரு மாணவனின் எதிர்கால கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமான அத்திவாரம் ஆகும் பாடசாலைக் கல்வியுடன் பெற்றோரின் பங்களிப்பும் மாணவனின் கல்வி வளர்ச்சிக்கு அவசியம்.

கோப்பாய் புனிதமரியாள் ஆலய பங்குத் தந்தை அருள்திரு. பிரான்சிஸ் குலாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

கோப்பாய் தெற்கு றோ. க. த. க. வித்தியாலயத்தில் நடைபெற்ற சிரமதான நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. கே. கணபதிப்பிள்ளை தலைமையில் சிரமதான நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கொத்தணி அதிபர் திரு. கே. இராசரத்தினம் உரையாற்றுகையில், இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள். நலன்விரும்பிகள் பலர் இப்பாடசாலைக்கு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்துவருகின்றார்கள்.

இப்பணிகள் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் திறமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன என்றார்.

சமாதான நீதவான் திரு. எம். கே இளையப்பு, திரு பி. வரதகுலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

புது வருட

வாழ்த்துகள்

அந்தியகால சேவை இக்கட்டான வேளையிலும் சேவையை தொடர்ந்து நடத்துபவர்கள். எவ்வேளையிலும் சிரமமின்றி சேவை செய்பவர்கள். நாட்டின் சூழ்நிலை காரணமாக பாதுகாப்பு கருதி இலக்கம் 210 சந்திர மயூர் கோவில் அருகாமையில் ஓர் கிளை ஆரம்பித்துள்ளோம்.

பெட்டிகள் COFFIN
பிரேத பாதுகாப்பு (எம்பாமிங்) Embalming
வான் சேவிஸ் FUNERAL CAR
மலர் வளையங்கள் WREATHS
மற்றும் ஏனைய பலவித சேவைகள்

Bright House,
69, Main Street,
Jaffna
Telephone: 23892.

Bright House,
Funeral Services,
(Nalliah)
No. 210, Main Street,
Jaffna.

(1183)

இசைப் பெரியாரின் மறைவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம் ஏப்.18

அண்மையில் அமரரான இசைப் பெரியார் திரு. என். சண்முகரத்தினத்திற்கு யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

கடந்த வாரத்தில் நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெற்ற இசைப் பெரியார் அஞ்சலிக் கூட்டத்திலேயே அஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு. வ. சித்திவிநாயகம் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது

அமரர் இசைப் பெரியார் சண்முகரத்தினம் ஈழத்தில் மட்டுமல்ல இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் இசைப் பெருமகனாக மதிக்கப் பெற்றவர்.

ஈழத்துக் கலைஞர்களில் அவருக்கே இந்திய வானொலியில் முழுநேரக் கச்சேரி செய்யும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

அன்னாரின் பெருமைகள் பற்றி பலரும் கூட்டத்தில் எடுத்துரைத்தனர்.

(இ-ள)

கோரிக்கை

ஊர்காவற்றுறை, ஏப்.18

ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த வெலிஞ்சிமுனைக் கிராம மக்களின் நலன் கருதி நீர் விநியோகத் திட்டமொன்றை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. இக்கிராம மக்கள் கையெழுத்திட்டு அரசாங்க அதிபருக்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர். (உ-16)

ஊழியர் சேமலாபநிதி

உழைக்கும் வர்க்கத்துக்கு நன்மை பயக்கும் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.18

ஊழியர் சேமலாபநிதி உழைக்கும் வர்க்கத்துக்கு நன்மை பயக்கும் நிதியமாகும்.

—இப்படிச் சொன்னார் யாழ் மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் திரு. என். தியாகராசா.

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கு உரிய சேமலாபநிதிக் கணக்குப் புத்தகங்களை வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

அந்தவைபவத்தில் கலந்துகொண்டு உதவி ஆணையாளர் மேலும் சொன்னதாவது;

வயோதிப காலத்தில் உடல்வலு இழந்து மற்றவர்களில் தங்கியிருக்கும் நிலையை அடையும் தொழிலாளிக்கு சேமலாப நிதித்திட்டம் நம்பிக்கை உணர்வை ஏற்படுத்துகின்றது.

ஆகவே உழைக்கும் காலத்தில் இத்திட்டத்துக்கு ஊழியர் தமது பங்களிப்பைச் செய்யவேண்டும். தவறின் அவர்கள் தங்களுக்கே கெடுதியை மேற்கொண்டவர்கள் ஆவர்—என்றார்.

சங்கத் தலைவர் திரு. பி. கனகசபாபதி கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். தொழில் அதிகாரி திரு.ரி தர்மராசா, சங்க நிர்வாக உறுப்பினர்களான பி. கே. இராசரத்தினம், பி. சபாபதி பொதுமுகாமையாளர் [illegible] ஆகியோரும் [illegible]

(உ-எ)

மக்கள் முகம்

வயாவிளான் பிரசைகள் குழு

யாழ்ப்பாணம், ஏப் 18

வயாவிளான் பிரசைகள் குழு நடப்பு வருட நிர்வாகிகள் விபரம் வருமாறு.

தலைவர்: திரு. எஸ். என். ஜி. நாதன், உபதலைவர்கள்: திரு. வ. சிங்கராயர், திரு கோ. சிவபுத்திரன்.

இணைச் செயலாளர்கள்: திரு. க முத்தையா, திரு: மு. தேவராசா பொருளாளர்: திரு: நா. நேசராசா.

திரு. திரு. தி யோன், திரு. சி. கதிரவேலு, திரு. சி. சத்தியசீலன், திரு சி. தனபாலசிங்கம், திரு. பா. நவரத்தினம், திரு. இ. சிவபாதம், திரு. எஸ். சுப்பிரமணியம், ஆகியோரைக் கொண்ட நிர்வாகக்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது: (இ-ள)

அகதிகளுக்கு உதவ கரைவலை மீன்பிடித் திட்டம் அமுல்

பருத்தித்துறை ஏப். 13

பருத்தித்துறை அகதிகள் புனர்வாழ்வுச்சபை திருமலையிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள அகதிகளின் புனர்வாழ்வுத் திட்டத்திற்காகப் பல வேலைத்திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது.

இதன் முதற்கட்டமாக கரைவலை மீன்பிடித் திட்டம் மணற்காடுப் பகுதியில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

★ பிரயாணத்திற்குத் தயாராகுங்கள்!

உங்களைப் பாதுகாப்பாகக் கூட்டிச் செல்ல

★ GLORIA TRAVELS ★

● ஆயத்தமாக இருக்கிறது ●

★ Seaman ★ Deck Boy ★ Oiler
★ A. B. Sailor ★ Mess Boy

ஆகிய துறைகளில் பயிற்சி உள்ளவர்கள்
நேரில் தொடர்பு கொள்ளவும்.

★ பிரான்ஸ் ★ ஜேர்மனி ★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர்
கொழும்பிலிருந்து அழைத்துச் செல்வார்.

பாஸ்போட், பொண்ட் (BOND) விசா, ரிக்கட்
ஆகியனவும் செய்து தரப்படும்.

★ GLORIA TRAVELS ★

சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்,

★ எமக்கு வேறு கிளைகள் இடையாது (C 10)

உதய சங்கற்பம்

தொடர்ந்தாற் போல் தியானம் செய்தால் மனம் உறுதி பெற்றுவிடும்.

— அன்னை சாரதாதேவி

உதயன்
[illegible]
இல, 15, 3ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம் 13-04-1987 த.பெ இல. 28

ஆணைக்குழு எதற்கு?

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிமீது கடந்த முப்பதாம் திகதி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் குறித்து விசாரணை நடக்கப்போகிறது. அதற்காகத் தனிநபர் ஆணைக்குழு ஒன்றை அரசாங்கம் நியமித்திருக்கிறது. தனிநபர் ஆணையாளராக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் திரு ஏ எவ் அலெஸ் பணியாற்றுவார்.

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் தனிநபர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. வழமையாக சம்பவத்துக்கான காரணத்தையும், அதற்குப் பொறுப்பாளிகள் யார் என்பதையும் கண்டறிந்து அதே போன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்காமல் சிபார்சுகள் வழங்குவதே ஆணைக்குழுக்களின் கடமையாக இருப்பது உண்டு.

ஆனால் அலெஸ் ஆணைக்குழு நியமிக்கப்படுவது குறித்து அரசாங்கச் சார்பில் அறிவித்தல் செய்த அமைச்சர் அத்துலத் தெரிவித்துள்ள குறிப்பு எமக்குச் சந்தேகத்தை எழுப்புகிறது.

விசாரணை நடக்கப்போவதன் நோக்கம், யார் சரி, யார் பிழை என்பது சம்பந்தமான விவாதத்தில் அதிக புள்ளி பெறுவதல்ல. ஆனால் எதிர்காலத்தில் இவ்வாறு நடக்காமல் தவிர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைக் கண்டறிவதே ஆகும் -- இவ்வாறு அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

யாழ். ஆஸ்பத்திரியில் அவமே உயிர்நீத்த ஒன்பது அப்பாவிகளின் மரணத்துக்கு யார் காரணம் என்பதுதான் முதலில் கண்டறியப்படவேண்டும். ஷெல்லை ஆஸ்பத்திரி மீது அடித்தவர்கள் யார் என்பதைக் கண்டு பிடித்து விட்டால் இனிமேல் அப்படி நடவாமல் தடுப்பது சுலபம்.

அமைச்சர் சொல்வதைப் பார்த்தால், இனிமேல் ஆஸ்பத்திரி மீது ஷெல்லடி நடவாமல் தவிர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது குறித்தே ஆணைக்குழு முக்கியமாக ஆராயும் என ஊகிக்க இடமுண்டு.

ஒன்பது பேரின் மரணத்தை ஏற்படுத்திய ஷெல் கோட்டையிலிருந்து ஏவப்பட்டது என்பது வெள்ளிடைமலை. அதனை யாழ் நீதிவானும், வைத்தியசாலைப் பணிப்பாளரும் உத்தியோகபூர்வமாக அறிவித்து விட்டனர்.

கோட்டை முகாமில் இருந்துதான் ஷெல் ஏவப்பட்டது என்ற உண்மையைச் சீரணிக்க அரசாங்கம் தயாராக இல்லை. அதனை ஒப்புக்கொண்டால், யாழ் நீதிவானின் தீர்ப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டால், உலகத்தின்முன் முகத்தைக் காட்ட இயலாது. ஆகவேதான் அதனைச் "சரிக்கட்ட" ஏதாவது செய்ய வேண்டும் என அரசு நினைத்திருக்கவேண்டும். அதன் விளைவே ஆணைக்குழு நியமனம் எனவும் கொள்ளலாம் அல்லவா?

தனிநபர் ஆணைக்குழு, சம்பவம் நடந்த யாழ்ப்பாணத்துக்கு வருமா என்பதும் நிச்சயம் இல்லை. அது இங்கு வராதெனில் விசாரணை எதற்கு? ஆணைக்குழு எதற்கு?

மொத்தத்தில் ஸ்ரீலங்கா அரசு வைக்கும் விசாரணை எதிலும் நம்பிக்கை வைக்கும் நிலையில் தமிழர்கள் இல்லை. அது அனுபவத்தின் பால் உண்டானது. சன்சோனிக் கமிஷன் வருஷக் கணக்காக விசாரணை நடத்தியது. ஆனால் அதன் அறிக்கை பகிரங்கப்படுத்தப் படவில்லை. (பத்திரிகைகளில் மட்டும் கமிஷன் விசாரணைகள் வெளிவந்தன.) கமிஷன் முன் சாட்சியமளித்த தமிழ் அரச ஊழியர்கள் பழிவாங்கப்பட்டதே அன்றி ஆக்கபூர்வமாக நடந்தது எதுவும் இல்லை. லயனல் பெர்ணாண்டோ விசாரணைக்குழு தெரிவித்த சிபார்சுகளும் பூரணமாக அமுல் நடத்தப்படவில்லை.

இந்த லட்சணத்தில் ஸ்ரீலங்கா அரசு நியமிக்கும் விசாரணைக் குழுக்களை தமிழர்கள் ஏற்றுக்கொள்ளலாமா? அவற்றால் ஏதாவது பலன்தான் கிடைக்குமா?

தமிழரை நாளாந்தம் அழித்து ஒழித்து, அல்லற்படுத்தும் அரசு நியமிக்கும் விசாரணைக் குழுக்கள் முன் தமிழர்கள் சாட்சியமளிக்கவோ அவற்றில் கலந்து கொள்ளவோ கூடாது. அவ்வாறு கலந்துகொள்வது இனப்படுகொலையை தமிழர்களும் ஏற்றுக்கொள்வதற்கு ஒப்பாகும்.

ஓய்வுபெற்ற நீதியரசர் ஒருவர் தலைமையிலான இந்தியத் தூதுக்குழுவுக்கு அரசு அனுமதி அளிக்கவில்லை. உண்மை நிலை தெரிந்தால் உலக அரங்கில் தமக்கு ஆபத்து என்பது அதன் அச்சம்?

தமிழர்கள் இன்றுபடும் கஷ்டங்களைப் பார்ப்பதற்கு செஞ்சிலுவைச் சங்கக்குழு வருவதற்கு அனுமதியாத அரசு நியமிக்கும் விசாரணைக் குழுக்களுக்கு எப்படி ஒத்துழைப்புக் கொடுப்பது? அவ்வாறு ஒத்துழைப்பது தன்மானம் இல்லாதவன்-- தன்நலன் விரும்பாதவன் செயலாக அல்லவா முடியும்?

எனவே அரசாங்கம் நியமிக்கும் சகல விசாரணைகள், ஆணைக்குழுக்கள் என்பவற்றை தமிழ் மக்கள் இனிப் பகிஷ்கரிக்க வேண்டும். அரசின் அட்டூழியத்துக்கு எதிரான ஆட்சேபமாகவும் அது அமையும்.

பக்கசார்பற்ற சர்வதேச விசாரணைக் குழுக்கள் முன்னிலையில் மட்டுமே தமிழர்கள் தமது கஷ்டங்களை, இடர்களைச் சொல்வது என்ற முடிவு செய்து அவ்வாறே நடந்து கொள்ளவும் வேண்டும்.

அரச குடும்பத்துக்கு மானியம் வழங்குவது நிறுத்தப்பட வேண்டும்

இளவரசர் சார்ள்ஸ் கருத்து

லண்டன், ஏப். 13

பிரித்தானிய அரச குடும்பத்துக்கு வழங்கப்படும் அரச மானியம் நிறுத்தப்பட வேண்டும்.

இப்படி சார்ள்ஸ் இளவரசர் கருத்துத் தெரிவித்துள்ளார். தனது வாழ்க்கைபற்றி நூல் எழுதும் பத்திரிகையாளர் ஒருவரிடமே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

எலிசபெத் மகாராணியாரும், அரச குடும்பத்து ஏனைய ஏழு அங்கத்தவர்களும் ஓய்வூதியமாக எண்பது லட்சம் டொலரைச் சென்ற ஆண்டு பெற்றனர்.

அரச பரம்பரையினர் அரசிடமிருந்து தமக்கு வருமானத்தை எதிர்பார்க்கும் நிலைமை நீடித்தால், அவர்கள் தமது சொந்த மண்ணிலேயே வெறும் பொம்மைகளாக அல்லது சிறைக்கைதிகளாக இருக்கவேண்டிய நிலை உருவாகும்;

ஜப்பானிய அரசபரம்பரையினருக்கு இப்படியான ஒரு நிலைமை ஏற்பட்டது. நாடாளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் அரச பரம்பரையினர் விடுமுறையில் செல்லவும் முடியாது.

- இப்படி இளவரசர் சார்ள்ஸ் கருத்து வெளியிட்டு இருக்கிறார். (உ-9)

ஐரிஷ் பாஸ்போர்ட் பணத்திற்கு விற்பனை

பெரும் மோசடி அம்பலம்

லண்டன், ஏப். 13

ஐரிஷ் பாஸ்போர்ட்டுகளை கள்ளத்தனமாக மத்திய கிழக்குப் பிரஜைகளுக்கு பெரும் பணத்துக்கு விற்பனை செய்ததாகக் கூறப்படும் மோசடி ஒன்று அம்பலத்துக்கு வந்திருக்கிறது.

லண்டனில் உள்ள ஐரிஷ் தூதரக அலுவலகத்திலேயே இந்த மோசடி நீண்ட காலமாக நடைபெற்று வந்திருக்கிறது எனக் கூறப்படுகிறது.

லிபியா, ஈரான், லெபனான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு பாஸ்போர்ட் ஒன்று 15 ஆயிரம் ஸ்டேர்லிங் பவுண் வீதம் தூதரக அதிகாரிகள் விற்பனை செய்து வந்ததாகக் கூறப்படுகிறது.

ஐரிஷ் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் இது குறித்து கடும் விசாரணை நடத்தி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

றேகனின் பட்ஜெட் நிராகரிப்பு

வாஷிங்டன், ஏப். 13

அமெரிக்க ஜனாதிபதி றேகனின் 1988ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் அமெரிக்க நாடாளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது

394 அங்கத்தவர்கள் எதிர்க்க 27 பேர் மட்டுமே இதனை ஆதரித்தனர்.

பின்னர் ஜனநாயகக் கட்சியினர் பெரும்பான்மையாக உள்ள சபை சர்ச்சைக்குரிய புதிய வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றியது. (உ)

அமெரிக்காவுக்கு வரும்படி

ரஷ்யத் தலைவருக்கு றேகன் அழைப்பு?

மூன்றாவது உச்சநிலை மாநாட்டுக்கு முஸ்தீபு

லண்டன், ஏப். 13

ஆயுதப் பரிகரணம் குறித்த மூன்றாவது உச்சநிலைப் பேச்சுக்களை நடத்துவதற்காக அமெரிக்காவுக்கு வாருங்கள் - இத்தகைய அழைப்பு ஒன்றை அமெரிக்க ஜனாதிபதி றேகன் ரஷ்யத் தலைவர் கோர்பச்சேவுக்கு விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாஸ்கோ செல்லும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் சூல்ட்ஸ் அமெரிக்கஜனாதிபதியின் அழைப்பைக் கொண்டு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யத் தலைவருக்கு ஜனாதிபதி றேகன் எழுதியுள்ள கடிதம் ஒன்றை சூல்ட்ஸ் எடுத்துச் செல்கிறார். அந்தக் கடிதத்திலேயே இந்த அழைப்புப் பற்றி பிரஸ்தாபிக்கப் பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

ஆனால் இக்கடிதத்தின் உள்ளடக்கம் குறித்து கருத்து வெளியிட வெள்ளை மாளிகை அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

எனினும் மாஸ்கோ செல்லும் வெளியுறவு மந்திரி ஜோர்ஜ் சூல்ட்ஸ் அங்கு ரஷ்ய வெளியுறவு மந்திரி செவர்ணட்சேயுடன் பேச்சு நடத்தும் போது இத்தகைய மூன்றாவது உச்சநிலை மாநாடு குறித்து முடிவாகலாம் என வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டார்.

ரஷ்யாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் உளவு பார்த்ததாகக் கூறப்படும் சம்பவம், ஐரோப்பாவிலிருந்து நடுத்தர ஏவுகணைகளை அகற்றுதல் ஆகியவை குறித்தும் வெளியுறவு மந்திரிகள் மட்டப் பேச்சின்போது ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

வெளி உலகில்

மிடுக்கான மீசைக்கு பகத் சிங் கிண்ணம்

புதுடில்லி, ஏப் 13

மீசைக்கு அடித்திருக்கிறது அதிஷ்டம்.

சிறந்த மீசை வைத்திருக்கும் நபரைத் தெரிவு செய்யும் போட்டி இந்தியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் நடைபெற உள்ளது. மிகவும் மிடுக்கான மீசை உடையவரைத் தெரிவு செய்யும் போட்டி இம்மாதம் 20ஆம் திகதி பனு மருத்துவக் கல்லூரி வைத்திய சாலையில் இடம் பெறவுள்ளது.

இப்போட்டியில் முதலிடம் பெறுபவருக்கு பகத் சிங் கிண்ணம் வழங்கப்படவுள்ளது.

மேல் நோக்கி முறுக்கிவிடப்பட்ட மீசையுடன் காட்சி தந்த சுதந்திர போராட்ட வீரர் பகத் சிங்கின் பெயர் இவ்வெற்றிக் கிண்ணத்துக்குச் சூட்டப்பட்டு உள்ளது

வகைவகையான மீசைகளை வளர்த்துள்ள பீகார் பொலீஸார் இப்போட்டியில் மிகவும் ஈடுபாடு காட்டுகின்றார்களாம். (உ-9)

விண்வெளியில் மிதந்தனர்

லண்டன், ஏப்ரல் 13

ரஷ்ய விண்கலத்திலுள் சஞ்சரித்து வரும் இரண்டு விண்வெளி வீரர்கள் நேற்று சுமார் 4 மணி நேரத்துக்குமேல் விண்வெளியில் மிதந்ததாக ரஷ்யா அறிவித்துள்ளது. (உ)

பிஜியில் ஆளும் கட்சி பெரும் தோல்வி

லண்டன், ஏப் 13

பசுபிக் நாடுகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான பிஜி பிரதமர் ஸிஸமாராவின் தலைமையிலான அரசு 17 வருட ஆட்சியின் பின்னர் நேற்று நடைபெற்ற தேர்தலில் தோல்வியுற்றது.

மேற்கு நாடுகளுக்கு ஆதரவான ஆளும் கட்சியை டாக்டர் திமோஸி பராபரா தலைமையிலான எதிர்க்கட்சிக் கூட்டணி தோற்கடித்தது. (உ)

இஸ்ரவேல் ரஷ்ய பேச்சு

ரோம், ஏப். 13

இஸ்ரவேல் சோவியத் ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது. இது தொடர்ந்து நடைபெறும்.

இஸ்ரவேலிய வெளிநாட்டு அமைச்சர் ஷிமோன் பிரெஸ் இத்தகவலை வெளியிட்டு உள்ளார். (உ-9)

மந்திரக் கிழவிகள் படு கொலை

ஜகார்த்தா ஏப் 13

இந்தோனேஷியாவில் மந்திரவாதக் கிழவிகளை படுகொலை செய்யும் வழக்கம் அதிகரித்து வருகின்றது

கடந்த வருடத்தில் மட்டும் சுமார் 74 கிழவிகள் மக்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டனர்.

இவர்கள் துஷ்ட தேவதைகள் மூலம் நாட்டுக்குத் தீமை ஏற்படுத்துவதாக கிராம மக்கள் கருதுகின்றார்களாம்.

இந்தியாவில் வடமாநிலங்களிலும் இப்படியான படுகொலைகள் அதிகரித்து வருகின்றன! (ஒ)

செய்திக்கொத்து

வரணியில் தஞ்சம்

கொடிகாமம், ஏப். 13

வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய இடங்களில் நடைபெறும் வன்செயல்களைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் தென்மராட்சி கிழக்கைச் சேர்ந்த வரணிப்பகுதியில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர். (இ-75)

நோயாளருக்கு மதிய போசனம்

கரவெட்டி, ஏப். 13

மந்திகை ஆதார வைத்தியசாலையிலுள்ள மன நோயாளர்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமமும், மந்திகை ஸ்ரீசாயி சமிதியும் மதிய போசன உணவு வழங்கின (இ-70)

புளியங்கூடலில் விளையாட்டு மைதானம்

ஊர்காவற்றுறை, ஏப் 13

புளியங்கூடல் கிராமத்தில் உள்ள விளையாட்டுப் பிரியர்களின் வசதி கருதி புதிய விளையாட்டுமைதானம் ஒன்று அமைக்கப் படவுள்ளது.

இதற்காக தனியார் ஒருவர் தமக்குச் சொந்தமான காணியொன்றை அன்பளிப்புச் செய்துள்ளார். (இ-16)

கொங்கிறீட் மின்கம்பங்கள்

வேலணை, ஏப். 13

இலங்கை மின்சார சபையின் வேலணைப் பிராந்திய டிப்போவுக்குத் தேவையான கொங்கிறீட் மின்கம்பங்களை இங்குள்ள தனியார் நிறுவனமொன்றினால் விரைவில் வழங்கப் படவுள்ளன.

இதற்கான கட்டளைகள் இலங்கை மின்சார சபையின் யாழ் பிரதேச பொறியியலாளரால் மேற்படி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இக் கம்பங்கள் பெறப்பட்டதும் ஏற்கனவே மின்கம்பங்கள் இல்லாது வழங்கப்பட்ட தற்காலிக இணைப்புகள் சீராக்கப்படும். (இ-16)

பெரியதம்பிரான் கோயில் பாதை

யாழ்ப்பாணம். ஏப். 13

ஏழாலை பெரியதம்பிரான்கோவிலுக்குஏழாலை மேற்கு நாச்சியப்பர் ஆலயத்திலிருந்து ஒரு புதிய பாதை அமைக்கப்பட்டுள்ளது

இதுவரைகாலமும் இப்பாதை இல்லாததால் கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வந்தனர்

கோவில் நிர்வாகிகளின் வேண்டுகோளின்படி ஏழாலை தமிழீழ கிராம நீதிமன்றத்தினர் தற்போதைய புதிய பாதையை அமைத்துக் கொடுத்தனர். (இ-[illegible])

பாடசாலைக்கு மேடை

வட்டுக்கோட்டை, ஏப். 13

வட்டுக்கோட்டை கல்வி சமூக அபிவிருத்திக் கழகம் சுமார் ஐயாயிரம் ரூபா செலவில் நிரந்தர மேடை ஒன்றை வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாலயத்துக்கு அன்பளிப்பாக அமைத்துக் கொடுத்துள்ளது.

1926 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலைக்கு இதுவரை நிரந்தர மேடை ஒன்று இல்லாதிருந்த குறையை இக்கழகம் நிறைவேற்றி உள்ளது. (இ-161)

பொன்னாடை

சாவகச்சேரி, ஏப். 13

சாவகச்சேரி கற்குழி முருகமூர்த்தி ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழாவில் ஆத்மஜோதி ஆசிரியர் [illegible] முத்தையா பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்பட்டார். (இ-61)

முதலிடம் பெற்றார்

மண்டைதீவு, ஏப். 13

வேலணை கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற இசைப்போட்டியில் கீழ்ப் பிரிவில் மண்டைதீவு மகா வித்தியாலய மாணவி செல்வி இ. பிருந்தகுமாரி இராமச்சந்திரன் முதலிடத்தைப் பெற்றார் (இ-88)

பெற்றோர் கவலை

நெடுங்கேணி, ஏப் 13

நெடுங்கேணி மகா வித்தியாலய ஜீ. சி. ஈ. பரீட்சை முடிவுகள் திருப்தியளிக்காதது குறித்து பெற்றோர் கவலை கொண்டுள்ளனர். (இ-108)

குப்பைத்தொட்டி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13

திருநெல்வேலி பொதுச் சந்தையில் பயன்படுத்துவதற்காக மில்க்வைற் சவர்க்காரத் தொழிற்சாலை அதிபர் சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா பத்துக் குப்பைத் தொட்டிகளை அன்பளிப்புச் செய்துள்ளார். (இ-161)

சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப் 13

யாழ்ப்பாணம் அத்தியடி பிள்ளையார் கோயில் ரதோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை (புதுவருடத் தினத்தன்று) காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் தீர்த்த உற்சவம் நடைபெறும். (உ)

கேலிச் சித்திரம் என்ற பெயரில் சபையைக் கேலி செய்யலாமா?

ஆனந்த விகடன் தொடர்பான விவாதத்தில் நெடுஞ்செழியன்

பத்திரிகை உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய ஆனந்த விகடன் விவகாரம் சம்பந்தமாக தமிழ் நாடு சட்ட சபையில் நிகழ்ந்த விவாதத்தின் தொகுப்பின் இறுதிப் பகுதி இங்கு தரப்படுகிறது.

பி. யு. சண்முகம் — (சுகாதார அமைச்சர்) பேனா வாளிலும் கூரியது என்றால் ஜனநாயகக் குழந்தையை பேனா கொல்வது நியாயமாகுமா?

அங்கத்தவர்கள் இக்கட்டத்தில் பலத்த கூக்குரல் எழுப்புகிறார்கள்.

சபாநாயகர் பாண்டியன்:-

சபை உறுப்பினர்களைத் தாக்கும் பத்திரிகைகள் யாவும் மஞ்சள் பத்திரிகைகளே! ஆரோக்கியமான உள்ளங்களுக்குத்தான் ஆரோக்கியமான சிந்தனைகள் உண்டு. எளிய மனங்களுக்குத் தாழ்வான எண்ணங்கள் தான் வரும். நான் சபையைப் பாதுகாக்கவே இங்கு இருக்கிறேன்.

நாங்கள் இல்லாத திக் இல்லை. நாங்கள் இந்திரர்கள். மனோகரன் என்ன கோட்டும் சூட்டும் அணிந்திருக்கிறாரா?

இந்தச் சஞ்சிகையின் ஒரு மாத வருவாய்க்கு ஈடான ஒரு தொகையை இச்சபைக்கு தண்டமாக வழங்க வேண்டும். இது எனது வேண்டுகோள்.

தி. மு. க. உறுப்பினர் ஏ ரகுமான் கான் பேச எழுந்தபோது சபாநாயகர் கூறியதாவது:-

ஒரு தரம் கெட்ட பத்திரிகைக்கு வக்காலத்து வாங்காதீர். நான் உங்கள் எல்லோருக்கும் ஆகக் குரல் கொடுக்கிறேன். எமது கௌரவம் தான் இன்றைய பிரச்சினை.

நீர் உமது கௌரவத்தை இழக்கத் தயாராக இருக்கலாம். ஆனால், நான் எனது கௌரவத்தை இழக்கத் தயாரில்லை. நான் மிகவும் உணர்ச்சிவசப் படுபவன்.

ஒரு பத்திரிகை என்னையே கேலி செய்து கருத்து வெளியிட்டுள்ளது. அந்தக் குடும்பமே நாசமாகும் சபாநாயகராக இருப்பதால் என்னால் பதில் கூறமுடியாது அத்தகையவர்களைத் தண்டிக்கும்படி இறைவனை வேண்டவே முடியும்.

திரு. டீ. ரமணி (மார்க்சிய கம்யூனிஸ்ட்) உலக நாடுகள் எல்லாவற்றிலும் கேலிச் சித்திரங்கள் வெளிவருகின்றன. அவற்றை மக்கள் உரிய உணர்வுடன் ஏற்றுக் கொள்கிறார்கள்.

சபாநாயகர் பாண்டியன்:- அங்கத்தவர்களுக்கு இப்படித் தடித்த தோலா?

சபைத் தலைவர் திரு. நெடுஞ்செழியன்:-

இந்தச் சஞ்சிகை பல ஆண்டுகளாக கேலிச் சித்திரங்களை வெளியிட்டு வந்துள்ளது. இருப்பினும் இந்தக் கேலிச் சித்திரம் சபை உறுப்பினர்களை அவமதிப்பதாக இருக்கிறது.

ஒரு தனி மனிதரை அல்லது ஒரு குறிப்பிட்ட கட்சியை அவமதிப்பதாக இருந்தால், அவர்கள் சட்ட நடவடிக்கை எடுத்திருப்பார்கள்.

சபை உறுப்பினர்களைக் கட்டாக அவமதிப்பது காரணமாக, இது சட்ட சபையைப் பாதிக்கிறது. எனவே சபை நடவடிக்கை எடுக்கவேண்டி உள்ளது.

கேலிச் சித்திரம் என்ற பெயரில் சபை உறுப்பினர்களைக் கேலி செய்யலாமா? [illegible] சஞ்சிகைகள் வெளிவருகின்றன. அவற்றை நாம் தாக்குவதில்லை,

இந்தச் சஞ்சிகை தவறு செய்துள்ளது அதைத் தண்டிக்க வேண்டும்.

ஏனையோருக்குப் பாடமாக அமையும். விதத்தில் இத்தண்டனை அமையவேண்டும்.

இப்படி நெடுஞ்செழியன் கருத்து வழங்கினார். (முற்றும்) (உ-9)

சுத்திகரிப்பு வேலை தீவிரம்

ஊர்காவற்றுறை, ஏப். 13

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் ஊர்காவற்றுறை உப அலுவலக எல்லைக்குள் அடங்கும் வீதிகளைச் சுத்திகரிக்கும் வேலைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு இந்துக்கள் அதிகமாக வாழும் தெருக்கள் சுத்திகரிக்கப் படுவதாகவும் அத்தெருக்களில் உள்ள மின்சாரக் கம்பங்களில் மின்விளக்குகள் எரிவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்படி அலுவலக பொறுப்பதிகாரி திரு. சார்ள்ஸ் பொன்கலன் உதயனுக்குத் தெரிவித்தனர். (உ-16)

பொய்யாமொழி

குறள்:

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்

பொருள்:

பழி நாணுகின்ற பெருமக்கள், தினையளவு சிறுகுற்றம் நேர்ந்தாலும், அதைப் பனையளவாகக் கருதிக் (குற்றம் செய்யாமல்) காத்துக் கொள்வர்.

A/L 89
விஞ்ஞானப்பிரிவு
பௌதிகம்: திரு. சௌந்தி
மார்ச் 24 இல் மாலை 5-00 மணி
தூய, பிரயோக கணிதம் A. பத்மநாதன்
மார்ச் 25 இல் மாலை 4-00 மணி

உதயன்

13-04-1987 திங்கட்கிழமை

2 ஆவது பிரிவு
மார்ச் 25 இல்
காலை 8-00 மணி முதல் மாலை 1-30 வரை
(முற்றிலும் பாடசாலை வசதிகளுடன்)
விபரங்கட்கு:
Niru Tuition Centre
KONDAVIL.

வித்தாரம்

"என்ன முரளிமாச்சா இண்டைக்கு கொழும்புப் பேப்பரோடை வாறீர். என்ன விசேஷம்!

ஓ, அவை இஞ்சை யாழ்ப்பாணத்திலை நடக்கிற சம்பவங்களை முழுக்க முழுக்க மற்றப் பக்கத்தாலை எழுதியிருப்பினம்.

அவையளும் பாவங்கள். தொலைபேசித் தொடர்பு வசதி இல்லை. இஞ்சை இருந்து இராணுவமார் சொல்லுற பொய்யளுக்கு, அதிலை 'மீடியா சென்ரர்' கொஞ்சம் கூடக்குறைய கற்பனையைச் சேர்த்து பூசி மினுக்கிச் சோடித்துக் கொடுப்பினம். அதைத் தேவ வாக்கா வைச்சுக் கொண்டு செய்தியளை எழுதுறது தானே.

போன கிழமை இஞ்சை வந்த ஒரு கொழும்புப் பத்திரிகையாளர் தங்கடை நிலைமை விளக்கினார்.

யாழ்ப்பாண நிலைமை குறித்துத் தாங்கள் இருட்டிலை தானாம். சாதாரண தென்னிலங்கைப் பிரசைகளுக்கும் தங்களுக்கும் அந்த விஷயத்திலை வித்தியாசமில்லையாம். இரண்டொரு நாளைக்குப் பிறகு உண்மை நிலை தெரிஞ்சாலும் மீடியா சென்ரர் அறிக்கைக்கு முரணா எழுதினால் பல முரண்டுகளுக்கை அகப்பட வேண்டி வருமாம்!

வடக்கு கிழக்கிலை பயங்கர வாதத்துக்கு எதிராகப் போராடுவதாக அரசாங்கம் சொல்லிக் கொண்டிருக்க, தெற்கிலை மிகப் "பெரிய பயங்கர வாதம்" ஒண்டு புதிசாத் தோன்றி இருக்கு!

ருகுணுப் பல்கலைக்கழக மாணவர் மத்தியிலை எழுந்துள்ள பிரச்சினையைச் சொல்லுறேன் எண்டு நினைக்காதை

இரத்தினபுரிக்காரர் ஒருதருக்கு வந்திருக்கிற "எய்ட்ஸ்" பயங்கரவாதத்தைத் தான் சொல்லுறேன். அதை முறியடிப்பதிலை அரசாங்கம் பெரும் பாடுபடப் போகுது. இருந்து பார். எய்ட்ஸ் நோய் தடுப்புக்கு போதிய பயிற்றப்பட்ட ஆட்கள் இஞ்சை இல்லை எண்டதை அரசாங்க வட்டாரங்களே ஒப்புக் கொள்ளுதுகள்.

இரத்தினபுரிக்காரருக்கு "எய்ட்ஸ்" தான் எண்டதை விழுங்கி விழுங்கித் தான் அரசாங்கம் அறிவிச்சுது. பெரிசா ஒண்டும் பயப்படவேண்டியதில்லை எண்ட தொனியிலை. ஆனா இப்ப ஆஹா போகுது.

இரத்தினபுரிக்காரர் பெரிய இடத்தைச் சேர்ந்தவராம். கொழும்பிலையும் பெரிய "சோஷல்" தொடர்புகள் இருந்தனாம்.

ஆனால் "எய்ட்ஸ்" பயங்கரவாதம் அடுத்ததாய் கொழும்பைத்தான் வந்து அமுக்கிப் பிடிக்குமோ ஆருக்குத் தெரியும்.

தென்னிலங்கையை எய்ட்ஸ் கிலி அடையச் செய்திருக்கு.

சிறிலங்காவின் ஆத்ம நண்பன் பாகிஸ்தானை போதைப் பொருள் பயங்கரவாதம் ஆட்டிப் படைக்குது.

அங்கைதான் மிகப் பெரிய அளவிலை போதைப் பொருள் பயிரான "பாப்பி" விவசாயம் செய்திருக்கினம். அதை ஒழிக்க அரசாங்கப் படையளையே அமர்த்தி இருக்கினமாம்.

அவர் ஷியா அமெரிக்கா உதவியோடை அணுகுண்டு செய்யப் புறப்பட்டிட்டார். ஆனால் நாட்டிலை "பாப்பி" பாம்பு படமெடுக்குது...

கதையோடு கதையா முக்கியமான விஷயத்தைச் சொல்ல மறந்திட்டன்.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர் எண்டும், கொழும்புப் பத்திரிகையாளர் எண்டும் இஞ்சை அடிக்கடி படை எடுக்கினம். அரசாங்கத்துக்கும் அதிலை பெரிய பங்கு இருக்குது.

அவை இஞ்சை வந்து சேகரிக்கிற தகவல்களை அரசாங்கம் கறந்து போட்டுத் தான் விடுகிது. அதுமட்டுமில்லை அரசாங்கம் சில பேரை விசேஷமாகவே அனுப்பி வைப்பதாக கொண்டோடிக்குத் தகவல்.

வெளிநாட்டு, தென்னிலங்கைப் பத்திரிகைக் காரரோடை எப்பவும் அளந்து பேசுவது மெத்த நல்லது. இதை முக்கிய ஸ்தாபனங்களில் இருக்கும் பிரமுகர்கள் அறிந்து கொள்வது நல்லதல்லோ!

மண்கும்பானில் ரதோற்சவம்

வேலணை. ஏப். 13

சப்த தீவுகளில் ஒன்றான லைடன் தீவில் அமைந்த மண்கும்பான் வெள்ளைப் புற்றடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய ரதோற்சவம் நாளை செவ்வாய்க் கிழமை வருடப்பிறப்பு அன்று நடைபெறும். மறுதினம் காலை தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

இந்த ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தை பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ நாகேந்திரக் குருக்கள் நடத்தி வைக்கிறார். (உ-167)

ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 13

அரளை செஞ்சுடர் விளையாட்டுக் கழகத்தின் எட்டாவது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டிகளும் இன்று தொடக்கம் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

15 ஆம் திகதியன்று கலை நிகழ்ச்சிகளும் நாடகங்களும் நடைபெறும்.

தீபலக்ஷ்மி பூசை

மானிப்பாய் ஏப்.13

புதுவருடப்பிறப்பு தினமான நாளை செவ்வாய்க்கிழமை ஆனைக் கோட்டை ஸ்ரீ பிடாரி அம்மன் கோவிலில் புது வருடப் பிறப்பு பூசைகளும், 81 ஆவது தீபலக்ஷ்மி பூசையும் நடைபெற உள்ளன. (உ-90)

திருவிளக்கு பூசை இன்று

மானிப்பாய், ஏப்ரல் 13

மானிப்பாயில் உள்ள சோதி வேம்படி ஸ்ரீகாளி அம்மன் கோவிலில் இன்று திங்கட்கிழமை திருவிளக்குப் பூசை நடைபெற உள்ளது.

அபிஷேக ஆராதனைகளோடு வருடாந்த குளிர்த்தி பூசை நடைபெற்று, தொடர்ந்து திருவிளக்குப் பூசை நடைபெறும் (உ-90)

தாவடியில் ரதோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப் 13

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளை காலை எட்டு மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் காலை ஆறு மணிக்கு விசேட பூசைகளுடன் வசந்த மண்டப பூசையும் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (உ-10)

விமர்சன அரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.13

பார்த்திபனின் 'நிஜங்கள்' சிறுகதை தொகுப்பு பற்றிய விமர்சன அரங்கு மகவம் ஏற்பாட்டில் நாளை புதுவருடப்பிறப்பு அன்று பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணிவரை ஊரெழு மதி அக்கடமியில் நடைபெறும்.

மகவம் தலைவர் திரு வேல் அமிர்தன் நிகழ்ச்சிக்கு தலைமை வகிப்பார். (உ-எ)

யாழ். அரச அதிபர் கோரினால்

குடாநாட்டிலுள்ள 1 லட்சம் அகதிகளுக்கு உதவத் தயார்

அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ் குடாநாட்டில் உள்ள ஒரு லட்சம் அகதிகளுக்கும் உதவி வழங்குமாறு யாழ் அரச அதிபர் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் புனர்வாழ்வு அமைச்சு அவர்களுக்கு உதவி செய்யத் தயாராக உள்ளது.

இவ்வாறு புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார் என அறியவருகிறது.

பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழுப் பிரதிநிதி ஒருவர் அமைச்சின் செயலாளரைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டிலுள்ள முகாம்களின் விஸ்தரிப்பாலும் வான்தாக்குதல்களாலும் சுமார் 20 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 1 லட்சம் மக்கள் அகதிகளாகி உள்ளனர்.

இவர்களில் 75 வீதமானவர்களுக்கு எவ்வித நிவாரணமும் இதுவரை வழங்கப்படவில்லை.

இவ்வாறு ஒன்றிணைப்புக் குழுப் பிரதிநிதி அமைச்சின் செயலாளரிடம் எடுத்துக் கூறினாராம்.

அதற்குப் பதிலளித்த செயலாளர்-

உள்ளூர் அகதிகள் தத்தமது பிரிவு உதவி அரச அதிபர்கள், அரச அதிபர் ஆகியோர் ஊடாக விண்ணப்பம் செய்யும் பட்சத்தில் அமைச்சு உடன் நிவாரண உணவு வகைகளை வழங்கத் தயாராக உள்ளது என்று கூறினாராம். (உ-எ)

ஆலயங்களில் புனிதத்தைப் பேண சைவர்களே அணிதிரளுங்கள்!

மாவிட்டபுரம் ஆலய பிரதமகுரு கோரிக்கை

காங்கேசன்துறை, ஏப் 13

இன்று ஏற்பட்டுள்ள நிலை மட்டுமன்றி இன்னும் கஷ்டங்கள், துன்பங்கள் வரலாம் எது வந்தாலும் தெய்வ சந்நிதானங்களின் புனிதத்தை பாதுகாக்க சைவப்பெருமக்கள் அணிதிரள வேண்டும்.

-இவ்வாறு மாவைக் கந்தன் ஆலயத்தில் நேற்று பூசை ஆராதனைகளை ஆரம்பித்து வைத்து அங்கு கூடியிருந்த சைவப் பெருமக்கள் மத்தியில் உரையாற்றிய ஆலய ஆதீனகர்த்தா சு. து. ஷண்முகநாதக் குருக்கள் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஆலயத்திற்கும், பக்தர்களுக்கும் பாதுகாப்பில்லாத சூழ்நிலையில் பூசைகளை நிறுத்த வேண்டி ஏற்பட்டது.

இன்று எழுச்சி ஊர்வலம் ஒன்று நடத்தி பூசைகளை நடத்துமாறு பக்தர்கள் கேட்டனர் முருக பக்தர்களின் வேண்டுகோளை ஏற்று மீண்டும் பூசை ஆராதனைகள் ஆரம்பிக்கப்படுகின்றன என்றார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில்- முருகன் ஒருபோதும் கண்மூடி இருக்க மாட்டான். இருந்தபோதும் ஆலயத்தில் அவனை கண்மூடி இருக்க நாம் வைக்கக் கூடாது. பூசைகள் ஆராதனைகள் தொடர்ந்து இடம்பெற நாம் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றார்.

தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கத் தலைவர் திரு. எஸ் சிவமகாராசா, திரு வைரவப்பிள்ளை உட்பட பலர் உரையாற்றினர். (உ68)

வைத்திய - - -

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

அத்துலத் முதலியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது.

ஷெல் தாக்குதலினால் சேதமடைந்த வைத்தியசாலைப் பகுதிகளினதும் இறந்த நோயாளர்கள், காயமடைந்த நோயாளர்கள் ஆகியோரினதும் புகைப்படங்களை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்திடம் சங்கத்தின் யாழ் கிளைத் தலைவர் டாக்டர் எஸ். சிவகுமாரன் கையளித்தார். (உ-10)

புதிய இணைப்பதிகாரி

கொழும்பு, ஏப். 13

மட்டக்களப்பு மாவட்டத்தின் இணைப்பு அதிகாரியாக பொலிஸ் அத்தியட்சகர் திரு. நிமால் சில்வா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இம்மாதம் 15 ஆம் திகதியில் இருந்து இவர் பதவி ஏற்கிறார்.

இணைப்பு அதிகாரியாகப் பணிபுரிந்த திரு. சமித் சில்வா களனிப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (உ-ஐ-எ)

பாதுகாப்பு - - -

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

நிலையை ஏற்படுத்தியது.

கமிஷன் பெற்ற சம்பவம் பிரதமரின் பொறுப்பில் பாதுகாப்பு அமைச்சு இருந்தபோது இடம் பெற்றது.

திரு சிங்கின் உத்தரவை ஆளும் கட்சியைச் சேர்ந்த பலரும் எதிர்த்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக நேற்று காலை உள்துறை அமைச்சர் பூட்டாசிங்கும் வர்த்தக அமைச்சர் சிவ்சங்கரும் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினர்.

இதனிடையில் பதவி விலகிய திரு. வி. பி. சிங்—

"எதிர்காலத்தில் அரசின் எந்தப்பதவியையும் வகிக்கப் போவது இல்லை"— என்று கூறிவிட்டார்.

"பிரதமருக்கும் இந்திரா காங்கிரஸுக்கும் உழைப்பதையே மிகப் பெரிய கௌரவமாகக் கருதுகிறேன்"— என்றும் திரு. சிங் சொன்னார். (உ-எ)

இனப்பிரச்சினை- - -

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

நடைமுறைப் படுத்தப் பட்டதா?

பெரும்பான்மை இனத்துடன் ஒத்துழைக்கும் விருப்பத்தை தமிழர் தொடர்ந்து தெரிவித்து வந்தனர்.

துரதிர்ஷ்டவசமாக இம் முயற்சிகளை சிங்களவரின் அதிகார வர்க்கம் தாக்கி எறிந்துவிட்டது.

தமிழருக்கு ஒரு பாடம் படிப்பிக்கவே 1983 கலவரம் உருவாக்கப்பட்டது.

மாவட்ட அபிவிருத்திச் சபை தமிழருக்கு வழங்கப்பட்ட பெரும் சலுகை என்று சிங்களவர் எண்ணினர்.

தேசிய நலன் கருதி இப்படியான அபிப்பிராயங்களுக்கு இடமளிக்கக் கூடாது.

கேள்வி; கிழக்கு மாகாணத்தில் இருந்து சிங்களவர் துரத்தி அடிக்கப் படும்போதும் மலைநாட்டில் தோட்டத் தொழிலாளர் நிலை [illegible]ப்படுவதாக ஒரு குறை.

கொள்கையை ஒரு புறம்வைத்துவிட்டு இந்த நிலை பற்றிய இறுதியான பிரதிபலிப்பு பற்றிச் சொல்வீர்களா?

அமைச்சர் பிழையான [illegible] பிரதிபலிப்பையே கொண்டிருக்கும். சுதந்திரத்தின் பின்னர் எல்லா அரசுகளும் திட்டமிட்டு சிங்களவரைக் குடியேற்றின. சுயேச்சையான முறையில் சிங்களவர்கள் குடியமர்ந்ததைக் குறித்து ஒருவரும் குறைப்பட முடியாது.

ஆனால் திட்டமிட்ட முறையில் ஓர் இனத்துக்கு எதிராக மற்ற இனத்தைக் குடியேற்றுவதற்கு ஒருவரும் ஆதரவளிக்க முடியாது.

இன்றைய துக்ககரமான நிலைமைக்குக் காரணம் சுதந்திரத்துக்குப் பின்னர் பதவிக்கு வந்த அரசாங்கங்களின் தவறான கொள்கைகளே.

கேள்வி: இத்தவறான கொள்கை கிழக்கு மாகாணத்துடன் சம்பந்தப்பட்டுள்ளது.

அமைச்சர்: ஆம். கிழக்கு மாகாணத்தில் இன்றுள்ள சிங்களவரின் எண்ணிக்கையையும் சுதந்திரம் கிடைத்த நேரத்தில் இருந்த எண்ணிக்கையையும் எடுத்துப் பாருங்கள்.

செயற்கையாகக் கொண்டுவரப்பட்ட எதையும் நீங்கள் என்றைக்கும் பராமரிக்க முடியாது.

பெரும்பான்மை இருக்[illegible] எல்லாம் [illegible]வைகளையே. (உ-எ)

ஒக்ஸ் - - -

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

கொண்டார்.

அன்னியர் முன்னணி, அகதிகள் புனர்வாழ்வு நிதியம் ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள் இவரை நேற்றுச் சந்தித்தனர்.

உள்ளூர் அகதிகளுக்கும், ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்த வேண்டியோருக்கும் தகுந்த நிதி உதவி அளிப்பதாக இவர் உறுதியளித்தார்.

சாம் ஹென்றி இன்று கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொள்ளுவார். (உ-எ)

மிகப் பெரிய அளவில் ஹிரோயின் வேட்டை

பாகிஸ்தானில் நடவடிக்கை

லண்டன், ஏப்ரல் 13

ஆயிரத்து 400 கோடி டாலர் பெறுமதியுடைய — ஹிரோயின் போதைப் பொருளைத் தயாரிக்கக்கூடிய - பாப்பி பயிர்களைப் பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் அழித்தனர்.

போதைப் பொருள் உற்பத்திக்கு எதிரான இந்த நடவடிக்கையில் 4 ஆயிரம் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

மிகப் பரந்த பிரதேசத்தில் பயிரிடப்பட்டிருந்த இந்தப் பயிரைப் பாதுகாப்புப் படையினர் அழித்தபோது பெருந்தொகையான விவசாயிகள் அதனை எதிர்த்தனர்.

அவர்களுக்கு எதிராகப் படையினர் கண்ணீர்ப்புகைக் குண்டு, குண்டாந்தடிப் பிரயோகங்களை மேற்கொண்டனர். (உ)

இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப் பகுதியில் யூத- அரபு கலவரங்கள்

லண்டன், ஏப்.13

இஸ்ரேலியரினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் லெபனானின் மேற்குக் கரையோரப் பகுதியில் யூத, அரபு மக்களுக்கிடையே நேற்று பெரும் கலவரம் மூண்டது

இதனையடுத்து அப்பகுதியில் காலவரையறையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலியக் குடும்பம் ஒன்று சென்று கொண்டிருந்த கார் ஒன்றின் மீது பெற்றோல் குண்டு வீசப்பட்ட சம்பவம் ஒன்றை அடுத்தே இந்தக் கலவரங்கள் வெடித்தன.

இந்தச் சம்பவத்தில் யூத பெண்மணி ஒருவர் கொல்லப்பட்டார். அவரது கணவர் மிக ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். இந்தத் தம்பதிகளின் மூன்று குழந்தைகள் கடும் எரிகாயங்களுக்கு இலக்கானார்கள். மற்றைய இரண்டு குழந்தைகள் சிறிய காயங்களுக்கு இலக்கானேர்.

இந்தக் குண்டு வீச்சுச் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் குடியேறியுள்ள யூதக் குடும்பங்கள் அருகில் காக்கிலியா என்ற கிராமத்தில் உள்ள அரபு குடியேற்றப் பகுதியைக் கடுமையாகத் தாக்கி சேதம் விளைவித்ததாக அறிவிக்கப்படுகிறது (உ)

ராணுவ - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நாம் அறிவோம் -

எது எப்படி இருப்பினும் தீவிரவாதிகள் பேச்சுவார்த்தைக்கு இணங்கத் தவறும் அல்லது தாமதிக்கும் நிமிடத்துக்கு நிமிடம் இராணுவ நடவடிக்கைகளை அதிகரிக்க ஆலோசித்து உள்ளோம் - இவ்வாறு அவர் தெரிவித்தார் என்று அறியவந்தது.

இதேவேளை இப்போது அமுலில் இருக்கும் 'இராணுவத் தாக்குதல் நிறுத்தம்' காலாவதியாவதற்கு முன் தீவிரவாதிகள் அமைதியை நிலைநாட்ட ஒத்துழைப்பு நல்காவிடில் யாழ்ப்பாணத்தில் இதுவரையில் நடவாதவாறு மிகப் பெரிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏற்பாடாகி உள்ளதாகவும் அறியப்படுகிறது. அனேகமாக இம்மாதம் இறுதிப் பகுதியில் அப்படி ஒரு நடவடிக்கை எடுக்கப்படக்கூடும் எனவும் தெரியவருகிறது. (அ-10)

வடிங்டன் வந்து சேர்ந்தார்

கொழும்பு, ஏப்.13

இலங்கையருக்கு விசா வழங்கும் முறை குறித்தும் இலங்கைத் தமிழ் அகதிகள் விடயம் குறித்தும் ஆராய்வதற்காக பிரிட்டிஷ் உள்துறை இணை அமைச்சர் டேவிட் வடிங்டன் நாலு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார்.

திங்களன்று நுவரெலியா செல்லும் அமைச்சர் அங்கு ஜனாதிபதி, தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரைச் சந்தித்துப் பேசுவார்.

அவர் திருகோணமலைக்கும் வவுனியாவுக்கும் செல்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமலை - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

அப்போது சுமார் 400 பேர் வரையில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

விசாரணையின் பின்னர் 76 பேரைத் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டனர்.

76 பேரும் வெலிஓயாவில் உள்ள ஸ்ரீபுர இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை வவுனியா அல்லது முல்லைத்தீவு அரச அதிபர் ஊடாக விடுவிக்குமாறு அளம்பில் -செம்மலை பிரசைகள் குழு முல்லைத்தீவு அரச அதிபரைக் கேட்டுள்ளது. (உ-எ-98)

கோண்டாவில் டிப்போவின்

திருமலை, கொழும்பு பஸ் சேவைகள் ரத்து

இன்றும்நாளையும் நடைபெறாது

யாழ்ப்பாணம், ஏப். 13

புதுவருடத்தை முன்னிட்டு இன்றும் நாளையும் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை (டிப்போ) திருகோணமலை, கொழும்பு பஸ் சேவைகளை நடத்த மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் முதல் வழமைபோல் இச்சேவைகள் நடைபெறும்.

இதேவேளை சண்டிக்கான விசேட பஸ் ஒன்று 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படுகிறது.

இந்த பஸ் சேவையின் கட்டணமாக 125 ரூபா அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

அகதிகளுக்கு - - -

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

திருமலை அகதிகள் மட்டுமன்றி உள்ளூர் அகதிகளும் பயன் பெறுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு மணற்காட்டுப் பகுதி மீனவர்கள் உதவி செய்ய முன்வந்துள்ளனர்.

கரைவலை மீன்பிடித் திட்டத்திற்கு யாழ். தமிழர் அகதிகள் புனர்வாழ்வு நிதியமும் வடமராட்சி வடக்கு, கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் செய்த உதவிகளுக்கு வடமராட்சி அகதிகள் புனர்வாழ்வு ஒன்றியச் செயலாளர் திரு. ந குணசீலன் நன்றி தெரிவித்துள்ளார். (உ - 118)

அகதிப் - - -

(1 ம்பக்கத் தொடர்ச்சி)

தீவு மாவட்டத்திற்கு கடந்தசனியன்று விஜயம் செய்த இங்கிலாந்து ஒக்ஸ்பாம் தொண்டர் நிறுவன பிரதிநிதி திரு. சாம் ஹென்றியிடம் நேரடியாக முறையிட்டார் (உ-எ)

நீத்தார் பட்டியல்

செல்வி. பவானி அருணாசலம்

வல்வெட்டியைச் சேர்ந்த செல்வி பவானி அருணாசலம் நேற்று அகாலமரணமானார். ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை பத்துமணிக்கு வல்வெட்டியில் இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
நா. அருணாசலம்
இரசி உரிமையாளர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15, ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 13-04-1987 தொலைபேசி இல. 24805, 22073

Printed and Published by Uthayan Publications (Private) Ltd
15, Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office. Under Number
QJ/94/N/87 Telephone, 24805, 22073